# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் ஆகஸ்ட் மாத சாதாரணக்கூட்டம் 31.08.2021 ஆம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற்றது.

**பொருள் எண்.1**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் ந.க.எண்.237/செமதொ அ /2020 நாள் 05.12.2020-ல், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநரின் ஆணைப்படி, அரசால் தேர்வு செய்யப்பட்ட திருவாளர் பிரான் பிரிண்டிங் பிரஸ், கோட்டார், நாகர்கோவில் என்ற தனியார் அக்கசத்தார் மூலம் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் அச்சடித்த வகையில் 12.07.2016 முதல் தற்போது வரை உள்ள நிலுவை தொகை ரூ.2,24,260/-ஐ வழங்குவதற்கு, அரசிடமிருந்து போதிய நிதி ஒதுக்கீடு பெறப்படாததால், நிலுவை தொகையை அரசுத்துறைகள் மூலம் நேர் செய்வதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசுத்துறைகளுக்கு பிரித்து வழங்கப்பட்டதில், குளச்சல் நகராட்சிக்கு ரூ.7000/-ம் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி தொகையினை FRAN PRINTING PRESS, NAGERCOIL என்ற பெயரில் வங்கி வரைவோலை அல்லது கேட்போலையாக மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.7000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.2045/2012/இ1

**தீர்மானம் எண்.2545 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.2**

இந்நகராட்சி கண்காணிப்பு வாகனம் (ஈப்பு) TN 75 K 6526-ல் பராமரிப்பு பணிகளை ரூ.45,000/- உத்தேச செலவினத்தில் மேற்கொள்வதற்காக, மன்றத் தீர்மானம் எண்.2490 நாள் 25.02.2021-ன் படி, மன்ற ஒப்புதல் பெறப்பட்டு, கடந்த 16.07.2021-ல் M/S.Akshaya Motors, Unnamalaikadai நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டது. அதன் பின்னர் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது, Air conditioner compressor பழுதுப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி கண்காணிப்பு வாகனம் திட்டப்பணிகளை கண்காணித்தல் மற்றும் ஆய்வு கூட்டங்களில் கலந்து கொள்வதற்காகவும், நிர்வாக பணிகள் நிமித்தம் வெளியூர் செல்வதற்காகவும், அதிகமாக பயன்படுத்தப்படுவதால், ஏற்கனவே அனுமதி பெறப்பட்டுள்ள உத்தேச செலவினம் ரூ.45,000/-வுடன் கூடுதலாக ரூ.11,950/- செலவினத்தில் Air Conditioner compressor-ல் ஏற்பட்டுள்ள பழுதுகளையும் சரி செய்வதற்கும், மேற்படி கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.7057-1/2011/இ1

**தீர்மானம் எண்.2546 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.3

இந்நகராட்சியில் ஒப்பந்த பணிகள் மேற்கொண்ட வகையில் ஒப்பந்ததாரர்களால் செலுத்தப்பட்ட மற்றும் வேலைப்பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை காலம்கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் கீழ்காணும் விவரப்படி உள்ளது. எனவே, சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | வேலையின் பெயர் | வருடம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | Thiru.C.Chella Nadar | Providing Cement concrete pavement @ Thainathankarai. | 2011-12 | 13,002/- |
| 2. | | Construction of Amma Unavagam building near Colachel Kamarajar Bus stand. | 2014-15 | 96,489/- |
| 3. | | Providing paver block pavement @ Kottilpadu R.C church to Joseph Benedict colony. | 2014-15 | 9,400/- |
| 4. | | Construction of SWD with coverslab @ Colachel Thingal Nagar Main Road near Giri Thangam Hospital. | 2013-14 | 31,50/- |
| 5 | | Construction of SWD with Coverslab in Colachel Main Road near Anna Statue. | 2013-14 | 7,200/- |
| 6 | | Providing safety measures at Kayakumari palaya uchakadai and Colachel - Thiruvattar Road. | 2013-14 | 7,840/- |
| 7 | | Providing platform tiles @ Colachel Monday market main road near TB Junction. | 2013-14 | 2,250/- |
| 8 | | Providing paver block pavement @ Narikkal junction to Pampoori vaikkal in Ward No.23. | 2013-14 | 8,200/- |
| 9 | | Providing Bitumen patchwork with BT surface @ Palli Road. | 2017-18 | 5,000/- |
| 10 | | Providing color roofing sheet @ New fish Market complex | 2017-18 | 5,000/- |

ந.க.எண்.783/2019/பி1

தீர்மானம் எண்.2547 அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் சந்தை முதல்தளம் கடை எண்.6, வரிவிதிப்பு எண். 148/2017010-ஐ திரு.G.ஜெயசீலன் என்பவர் 01.08.2017 முதல் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.80400/- இந்நகராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது. கடைக்கு ஜுன் 2019 முதல் ஆகஸ்ட் 2021 வரை மாத வாடகை ரூ.213068/- நிலுவையாக உள்ளது. முன்வைப்புத் தொகையை விட மாத வாடகை ரூ.1,32,668/- நிலுவைத் தொகை அதிகமாக உள்ளதால், மேற்படி கடையின் முன்வைப்புத் தொகையிலிருந்து மாத வாடகையை ஈடு செய்யவும், பாக்கியுள்ள தொகையை வசூல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், கடையின் உரிமத்தை 01.09.2021 முதல் ரத்து செய்து விட்டு, கடையை மறு ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.2548 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சியில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட 40 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு, கடந்த 08.02.2019 அன்று திரு.டி.ஜஸ்டின் சுந்தர் சிங் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணி உத்தரவை ரத்து செய்து, 23.06.2021 அன்று இறுதியாணை பிறப்பிக்கப்பட்டதை எதிர்த்து, சம்மந்தப்பட்ட ஒப்பந்தாரரால், சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு எண். WP(MD) No.12467/2021 தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, குளச்சல் நகராட்சி சார்பாக நகராட்சி வழக்கறிஞர் திரு.P.ஆதிமூல பாண்டியன் ஆஜரான வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-1/2018/இ1

**தீர்மானம் எண்.2549 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கு வளாகத்தில், கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் திட்டப்பணிக்காக அமைக்கப்பட்டுள்ள கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில், திரு.T.R.பிரவின் ராஜ் என்பவரால் நீதி பேராணை எண்.13348/2021-ன் படி வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு கடந்த 04.08.2021 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நகராட்சி சார்பாக திரு.P.ஆதிமூல பாண்டியன் ஆஜரான வகையில் வழக்கறிஞர் கட்டணம் ரூ.10,000/-ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது

ந.க.எண்.871/2021/இ1

**தீர்மானம் எண்.2550 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.7

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலைய திட்டப்பணி கட்டுமானங்களை அகற்றுவது தொடர்பாக திரு.T.R.பிரவின் ராஜ் என்பவரால் நிதி பேராணை எண்.13348/2021-ன் படி, 1. முதன்மை செயலர், 2) நகராட்சி நிர்வாக இயக்குநர் 3) நிர்வாக இயக்குநர் (ஈர நிலை பிரிவு) சுற்றுச்சூழல் அமைச்சகம், 4) தலைவர், தமிழ்நாடு மாநில ஈர நில ஆணையம், சுற்றுச்சூழல் (ம) வனத்துறை, 5) கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் 6) நகராட்சி ஆணையர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாக சேர்த்து, சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில், வரிசை எண்.1,2,5-ல் இடம் பெற்றுள்ள பிரதிவாதிகள் சார்பாக ஆஜராவதற்கு எதிர்வாதுரை தயார் (Affidavit prepration and vetting) செய்த வகையில், வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/- ஐ வழங்க கேட்டு, திரு.P.சுப்புராஜ் அரசு வழக்கறிஞரிடமிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.871/2021/இ1

**தீர்மானம் எண்.2551 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.8

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் சந்தை தரைதளம் எடை எண்.6, வரிவிதிப்பு எண்.148/2017004-ஐ திரு.R.மோகன்லால் பாபு என்பவர் 01.07.2017-ல் மாத வாடகைக்கு எடுத்துள்ளார். தற்போது கடையினை தன்னால் நடத்த இயலாத காரணத்தினால் கடையினை ஒப்படைத்துள்ளார். கடைக்கு முன்வைப்புத் தொகையாக ரூ.66000/- காலங்கடந்த முன்வைப்புத தொகை பதிவேட்டில் உள்ளது. கடைக்கு மாத வாடகை ஜுன் 2021 முதல் ஆகஸ்ட் 2021 வரைக்கும் ரூ.22392/- நிலுவையாக உள்ளது. முன்வைப்புத் தொகயிலிருந்து மாத வாடகையினை ஈடு செய்து மீதமுள்ள தொகை ரூ.43608/-ஐ அன்னாருக்கு (திரு.R.மோகன்லால் பாபு) வழங்கவும், கடையின் உரிமத்தை 01.09.2021 முதல் ரத்து செய்யவும், கடையினை மறு ஏலம் விடவும் மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.216/2021/அ1

**தீர்மானம் எண்.2552 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.9

இந்நகராட்சியில், கசடு கழிவு மேலாண்மை திட்டம் : 2018-19-ன் கீழ், ரூ.548.35 இலட்சம் மதிப்பீட்டில், 40KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிக்கு, திரு.D.ஜஸ்டின் சுந்தர் சிங், ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட 08.02.2019 ஆம் தேதிய பணி உத்தரவு, 23.06.2021-ல் ரத்து செய்யப்பட்டதை எதிர்த்து, திரு.D.ஜஸ்டின் சுந்தர் சிங், ஒப்பந்ததாரரால் நிதி பேராணை எண்.12467/2021-ன் படி, 1) அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் 2) நகராட்சி நிர்வாக இயக்குநர் 3) கன்னியாகுமரி

மாவட்ட ஆட்சித் தலைவர் 4) துணை இயக்குநர், கனிம வளம் 5) நகராட்சி ஆணையாளர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாக சேர்த்து, சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் வரிசை எண்.1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் சார்பாக ஆஜராவதற்கு எதிர்வாதுரை தயார் (Affidavit prepration and vetting) செய்த வகையில், வழக்கறிஞர் கட்டணம் ரூ.5000/- ஐ வழங்க கேட்டு, திரு.P.சுப்புராஜ் அரசு வழக்கறிஞரிடமிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.566-1/2018/இ1

**தீர்மானம் எண்.2553 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.10**

அரசாணை எண்.(MS/36) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME1) நாள் 19.04.2021-ன் படி, தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கு அரசு நிர்ணயம் செய்துள்ளபடி, நகராட்சிகளின் தரம் வாரியாக தொகை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் படி, இந்நகராட்சிகு First grade Municipality என்பதால் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் Roc.No.130/2021/A2 Dated 30.07.2021-ன் படி, பங்கு தொகை ரூ.50,000/-லிருந்து ரூ.75000/- ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பங்குத்தொகை ரூ.75000/-ஐ தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்துக்கு வழங்க மன்றம் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்1542/2001/அ1

**தீர்மானம் எண்.2554 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.11**

குளச்சல் நகராட்சி வார்டு எண்.24, கதவு எண்.24-36/17 வரிவிதிப்பு எண்.148/024/00310 கோட்டார் மறைமாவட்ட பொருளாளருக்கு சொந்தமான கத்தோலிக்க சபையின் அறப்பண்பு கொண்ட கூட்டங்களுக்காக மட்டுமே தொடக்கம் முதல் செயல்பட்டு வருகிறது என கோட்டார் மறைமாவட்ட பொருளாளர் 28.02.2020 தேதிய கடிதத்தின்படி, நிர்ணயம் செய்து வழங்கப்பட்ட சொத்துவரியினை ரத்து செய்ய கோரப்பட்டுள்ளது. மேற்படி கோரிக்கையின் படி, நகரமைப்பு ஆய்வாளர் அவர்களின் 17.03.2020 ஆம் தேதிய அறிக்கையின்படி, மேற்படி கோட்டார் மறைமாவட்டத்திற்கு சொந்தமான கத்தோலிக்க சபையின் அறப்பண்பு கொண்டாட்ட கூட்டமாக செயல்படுவதால் தமிழ்நாடு நகராட்சி சட்டம் 83-ன் கீழ் சொத்துவரி விலக்கு அளித்து மேற்படி வரிவிதிப்பு எண்.148/024/00310-ஐ 2021-22 முதலாம் ஆண்டு முதல் சொத்துவரியை ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்777/2018/அ1

**தீர்மானம் எண்.2555 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள வெள்ளியாகுளம் ஏலா பொதுப்பணித் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. மேற்படி ஏலாவானது வெள்ளியாகுளம் பகுதியிலிருந்து நரிக்கல் பகுதி வரை சுமார் 200 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. மேற்படி ஏலாவிலிருந்து வரும் உபரி நீர் நரிக்கல் முதல் களிமார் வரையிலான நீர் வழித்தடத்தில் உள்ள வடிகாலின் வழியாக சென்று பாம்பூரி வாய்க்காலில் சேர்கிறது. மேற்படி வடிகால் ஆக்கிரமிக்கப்பட்டும், கழிவு நீர் கலப்பதால் திடக்கழிவுகள் படிந்து நீர் வடிவது முழுமையாக பாதிக்கப்பட்டும், வடிகாலின் குறுக்கே நகராட்சியால் பாலம் கட்டப்பட்ட பின்னர் தண்ணீர் வடிகாலில் வடிவதற்கு பதிலாக கழிவு நீரோடு சேர்ந்து ஏலாவில் தேங்கி, வெள்ளியாகுளம் ஏலா பாசனப்பரப்பில் விவசாயம் செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதால், நரிக்கல் முதல் களிமார் வரையிலான நீர்வழித்தடத்தில் காணப்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றி, வடிகாலை முன்பு இருந்த நிலைக்கு கொண்டு வந்து, விவாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குளச்சல் பகுதி விவசாய மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, மேற்படி பொருள் தொடர்பாக பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) அலுவலர்கள், நகராட்சி அலுவலகர்கள், அனைத்து கட்சி முக்கிய பிரமுகர்கள், விவசாய சங்க பிரநிதிகள் மற்றும் பொது மக்களின் பங்கேற்புடன் 23.07.2021 அன்று கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் வெள்ளியாகுளம் பராமரிப்பு பணிகள் பொதுப்பணி துறையால் மேற்கொள்ளப்படும் எனவும், உபநீர் செல்லும் நீர்வழித்தடம் ‘அ’ பதிவேட்டின் படி எந்த துறைக்கு சொந்தமானதாக குறிப்பிடப்பட்டள்ளதோ, அந்த துறையின் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என பொதுப்பணித்துறை அலுவலர்களால் தெரிவிக்கப்பட்டது. அதன்படி நகரசார் ஆய்வாளரால் ‘அ’ பதிவேடு சரி பார்க்கப்பட்டதில், மேற்படி நீர் வழித்தடம் அரசு புறம்போக்கு கால்வாய் என குறிப்பிடப்பட்டுள்ளதால், நகராட்சி மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள பொது மக்களால் கோரிக்கை வைக்கப்பட்டது. மேலும் மேற்படி நீர் வழித்தடம் பொதுப்பணி துறைக்கு சொந்தமானதாக இல்லாத நிலையில், நகராட்சி வடிகால்கள் வழியாக கழிவு நீர் கலப்பதாலும் நகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என பொதுப்பணி துறை அலுவலர்களால் தெரிவக்கப்பட்டதாலும், ஒரு வார காலத்திற்குள் பணி மேற்கொள்ளப்படாத பட்சத்தில் போராட்டம் நடத்தப்படுவதாக விவசாய சங்க பிரநிதிகள் தெரிவித்ததாலும், நகரசார் ஆய்வாளர் மூலம் நீர்வழித்தடத்தின் எல்கை நிர்ணயம் செய்யப்பட்டு, தூர்வாரி சுத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, நரிக்கல் முதல் களிமார் வரையிலான நீர்வழித்தடத்தில், நரிக்கல் நாகராஜா கோவில் அருகில் பக்க சுவர் இல்லாத காரணத்ததால், மண் சரிவு ஏற்பட்டு, வாய்க்கால் முழுவதும் மண் நிரம்பி வருவதை தடுக்கும் பொருட்டு, மேற்படி இடத்தில் மட்டும் தடுப்பு சுவர் அமைக்கவும், சிங்கன்காவு முதல் களிமார் வரை வடிகாலில் தூர்வாரும் பணியினை மேற்கொள்வதாகவும் தயார் செய்யப்பட் டுள்ள மதிப்பீடு ரூ.4,20,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்454-1/2021/இ1

**தீர்மானம் எண்.2556 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகப்பாலம் மற்றும் கொட்டில்பாடு பகுதிகளில் அமைக்கப்பட்டு இருந்த சூரிய ஒளியில் இயங்கும் சிறிய கோபுர மின்விளக்குகளில் (Solar Mini Mast lights) Solar panel மற்றும் 8 எண்ணம் விளக்குகள், நிவர் மற்றும் யாஸ் புயலின் எதிரொலியாக வீசிய புயல் காற்று மற்றும் கனமழையினால் பாதிக்கப்பட்டு, கீழே விழுந்து பழுதாகி விட்டது. இதனால் மேற்படி பகுதிகளில் தெருவிளக்குகளின்றி இருளாக உள்ளதாக பொது மக்களிடமிருந்து புகார் வரப்பெற்றது. மேலும் குளச்சல் தொகுதி சட்டமன்ற உறுப்பினரால் மேற்படி விளக்குகளை சீரமைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர தெரிவிக்கப்பட்டது. எனவே துறைமுகப்பாலம் மற்றும் கொட்டில்பாடு பகுதிகளில் சேதமடைந்து கீழே சாய்ந்துள்ள, சூரிய ஒளியில் இயங்கும் சிறிய கோபுர விளக்குகளை (Solar Mini Mast lights) சீரமைப்பதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.1,10,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ், மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்1042/2021/இ1

**தீர்மானம் எண்.2557 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.14

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை சுற்றறிக்கை ந.க.எண்.20452/2020/LA3 நாள் 21.04.2021 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி சுற்றறிக்கை ந.க.எண்.26/2021/பி1 நாள் 18.05.2021 ஆகியவற்றில், இந்நகராட்சிக்கு 15-வது மத்திய நிதிக்குழு மானியம் (15th CFC Tied Grant): 2020-21-ன் கீழ், திடக்கழிவு மேலாண்மை மற்றும் குடிநீர் வினியோகப் பணிகளை மேற்கொள்வதற்காக இரண்டாவது தவணையாக ரூ.33,72,212/- விடுவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், இந்நகராட்சி பகுதிகளில் வினியோகம் செய்யப்படும் குடிநீரில் Tail end-ல் 2 PPM அளவு குளோரின் இருக்கும் வகையில், Liquid Chlorination plant அமைப்பதற்கும், Liquid Chlorination plant-க்கு பாதுகாப்பு அறை (ம) மின் வசதிகள் செய்வதற்கும், தமிழக அரசு தெரிவித்துள்ளபடி, பொது மக்களுக்கு தினந்தோறும் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக புதிய ஆழ்துளை கிணறுகள் அமைத்து தற்போதுள்ள குடிநீர் உந்து குழாயில் (Existing Pumping line) இணைப்பதற்கும், மேற்காணும் திட்ட நிதி ஒதுக்கீட்டில் (15th CFC Recommendation Grant : 2020-21) புதிதாக இலகுரக வாகனங்கள் (Light Commercial Vehicle) வாங்குவதற்கு வழிவகை இல்லாத காரணத்தால், உப்பளம் பகுதி உரக்கிடங்கிற்கு செல்லும் மண் சாலையில், நகராட்சி வாகனங்கள் (BOV & Tipper Lorry) செல்வதற்கு வசதியாக தார் சாலை அமைப்பதற்கும், ரூ.34,00,000/- மதிப்பீட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | பணிகள் பெயர்<br>(W.S Work) | மதிப்பீடு<br>(ரூ.) |
|---|---|---|
| 1 | Providing liquid Chlorination systems in office OHT (inner & Outer) Bus stand OHT, KSSS Colony OHT in Colachel Municipality | 9,20,000/- |

| | | |
|---|---|---|
| 2 | Providing room with electrical arrangements for liquid chlorination system in office campus, Bus stand, Beach, KSSS colony OHT's in Colachel Municipality. | 5,00,000/- |
| 3 | Providing 2 Nos. new borewells @ CMC colony, Palathankarai and linking existing pumping line in Colachel Municipality. | 10,00,000/- |
| SWM | | |
| 4 | Providing BT Road @ Uppalam Compost yard entrance | 9,80,000/- |
| | **Total** | **34,00,000/-** |

மேற்காணும் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.34,00,000/-ல் திட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை (15th CFC Grand (Tied grant) IInd Instalment) ரூ.33,72,212/- போக மீதமுள்ள தொகை ரூ.27,788/- ஐ நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் திட்ட நிதி ஒதுக்கீட்டு விவரம் மன்றத்தின் தகவலுக்கும்,பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.747-12/2021/இ1

**தீர்மானம் எண்.2558 அனுமதிக்கப்படுகிறது**

**பொருள் எண்.15**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில், பொது மக்களுக்கு சீரான முறையில் குடிநீர் வழங்குவதற்கு ஏதுவாக, நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் பகிர்மான குழாய், பிரதான குழாய், மோட்டார்கள், பேனல் போர்டுகள், வால்வுகள், மின்சார இணைப்புகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் குடிநீர் வினியோகம் தொடர்பான அனைத்து பழுது நீக்கப்பணிகளையும் உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, 2021-22 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர பராமரிப்பு பணிகளுக்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.8,80,000/-க்கும், மேற்படி பணியினை நகராட்சி குடிநீர் வழங்கல் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.157-3/2021/இ1

**தீர்மானம் எண்.2559 அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண்.16

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் செயல்பட்டு வரும் மீன் சந்தை வளாகத்தை நிழற்பந்தல் (Shed arrangements) அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக ரூ.2,40,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மன்றத் தீர்மானம் எண்.2346 நாள் 28.08.2020-ன் படி, மன்ற ஒப்புதல் பெற்று திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, நிழற்பந்தல் அமைத்தல் பணி மேற்கொள்ளப்பட்டதில், ரூ.1,84,013/- செலவினத்தில் பணி முடிக்கப்பட்டது. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகையில் ரூ.55,987/- மீதமுள்ளது.

இந்நிலையில், இந்நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலையத்தில் கடை எண்.9-ஐ தீயணைப்பு நிலைய பயன்பாட்டிற்காக வாடகைக்கு விடப்பட்டிருந்ததை தீயணைப்பு துறை 22.01.2021-ல் நகராட்சி வசம் ஒப்படைத்ததால், மேற்படி கடை பொது ஏலத்திற்கு விடப்பட்டதில், துணிக்கடை நடத்துவதற்காக திருமதி.பேன்சி என்பவரால் ஏலத்திற்கு எடுக்கப்பட்டது. மேற்படி கடை தீயணைப்பு அலுவலமாக பயன்படுத்தப்பட்டதால், அதனை வியாபார நோக்கத்திற்காக மாற்றும் பொருட்டு, அதற்கான பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.56,000/-க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி, டாக்டர் அம்பேத்கார் தினசரி மீன் சந்தை வளாகத்தில் நிழற்பந்தல் அமைத்தல் பணியில் மீதமுள்ள தொகை ரூ.55,987/-ல், நிழற்பந்தல் அமைத்தல் பணிக்கான அதே விலை நிரக்கில், திரு.எஸ்.ஜாண்றோஸ் ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்வதற்கு மன்ற அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

ந.க.எண்.895-1/2020/இ1

**தீர்மானம் எண்.2560 அனுமதிக்கப்படுகிறது**

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி